## இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தி- 2013

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென கான் கருதிய என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்றாகவும் இவ்வறிக்கை கருத்தப்பட வேண்டும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கிழக்குப் பல்கழைக்கழகத்தின், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்கள் (எஸ்எல்பிஏஎஸ்)

மீளாய்வாண்டின் போது முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதும் தற்போது பயன்படுத்தப்படுவதுமான ரூபா 6,229,384 மொத்த கிரயத்திலுள்ள ஆய்வு கூடம், கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் போன்ற அத்தகைய நிலையான சொத்துக்கள் எஸ்எல்பிஏஎஸ் - 3 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டில் சபரகமுவ பல்கலைக்கழகத்திடமிருந்து பல்கலைக்கழகத்தால் கையேற்கப்பட்டிருந்த தளபாடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகம் ''விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப எம்/எஸ் கொன்ரியும் நோர்வேயின் பல்கலைக்கழகம் தொடர்பு செயற்திட்டம்'' மற்றும் ''உபவேந்தர் நிதியம்'' என்ற பெயரில் இரண்டு வங்கிக் கணக்குகளை பேணியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந்தக் கணக்குகளில் முறையே ரூபா 1,743,603 மற்றும் ரூபா 2,912,411 தொகைகள் இருந்தது. எவ்வாறாயினும், அந்த மீதிகள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 19,411,037 மொத்த பெறுமதியில் தளபாட உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் வாகனங்கள் போன்ற அத்தகை சொத்துக்கள் 1990 இல் நிலவிய போர்ச் சூழலின் போது இழக்கப்பட்டன என அறிக்கையிடப்பட்டிருந்தது. இது தொடர்பில், சொத்து இழப்புக்களாக கணக்குப் புத்தகத்தில் ரூபா 17,860,814 மாத்திரமே சீராக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 1,550,223 ஆன மிகுதிச் சொத்துக்கள் சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பட்டப்படிப்பு கல்வியின் இணைப்பு மற்றும் தர முன்னேற்ற செயற்திட்டத்தின் (ஐஆர்கியுயூஈ) பூர்த்தியாக்கலின் பின்னர் கணனிகள், தளபாடங்கள், புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற அத்தகைய இச் செயற்திட்டத்தின் சொத்துக்கள் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகமானது ஓய்வுபெற்றிருந்த, பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் வேறு இடங்களிற்கு இடமாற்றத்தில் சென்றிருந்த 253 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 10,175,390 கூட்டுமொத்தத் தொகையான நிலுவையாகவிருந்த மீதிகளை அறிவிடுவதற்கு 5 ஆண்டுகளிற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு வழங்குநர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 5,000,378 கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் புலனாய்வு செய்து உரிய வழங்குநர்களிடமிருந்து 10 ஆண்டுகளிற்கு மேலாக அந்த முற்பணங்களை அறிவிடாமல் 135 இறக்குமதி முற்பணக் கணக்குகளில்இருந்தன.

(இ) எரிபொருள், கொள்வனவுகள் மற்றும் கருத்தரங்குகள் போன் அத்தகைய பல்வேறு நோக்கங்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 14.61 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 01 முதல 17 ஆண்டுகள் வரையான வீச்செல்லை கொண்ட காலமாக இருந்தன.

(ஈ) பல்வேறு வழங்குநர்களிற்கு ரூபா 59.2 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த முற்பணங்கள் உரிய வழங்குநர்களை இனங்காண்பதற்கும் அவர்களிடமிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்காமல் 5 ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

| விடயம் | | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
| --- | --- | --- | --- |
| | | ரூபா | |
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 19,834,078 | உரித்துறுதிகள் |
| (ஆ) | பொறி மற்றும் இயந்திரங்கள் | 4,337,313 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (இ) | மோட்டார் வாகனங்கள் | 972,960 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (ஈ) | விளையாட்டுப் பொருட்கள் | 6,021,870 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (உ) | தளபாடம் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 132,868,565 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (ஊ) | ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 20,791,555 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (எ) | புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 17,889,686 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (ஏ) | ஏனைய சொத்துக்கள் | 24,638,430 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (ஐ) | சில்லறை கடன்பட்டோர் | 14,357,980 | விரிவான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு |

## 2.2.5 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகளின் பணிப்பாளர் நாயகத்தின் 1998 மார்ச் 06 ஆந் திகதிய பிஈ/01/174/11 (ஆ) ஆம் இலக்க கடிடம் மற்றும் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் 2013 மே 23 ஆந்திகதிய 08/2013 ஆம் இலக்க தாபனங்கள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களிற்காக மொழித் தேர்ச்சிக்காக செலுத்த வேண்டிய படிகள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டச் சபைகளிற்கு விரிவாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மொழித்தேர்ச்சிப் படியாக மீளாய்வாண்டின் போது 2005 இலிருந்து 2011 மார்ச் வரை பத்து கல்விசார் உத்தியோகத்தர்களிற்கு ரூபா

321,110 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் எழுபத்து நான்கு கல்விசாரா உததியோகத்தர்களிற்கு இன்னொரு ரூபா 187,252 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் சபை மற்றும் செனற்றின் அனுமதியில்லாமல் சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் தாதியியல் நிகழிச்சித்திட்டத்தில் பீஎஸ்சீ வசதியளிப்பதற்கு நோர்வே ரீஆர்ஒஎம்எஸ்ஓ பல்கலைக்கழகத்திடமிருந்து ரூபா 17,327,951 தொகையான நிதிகள் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பில் தனித்தனியாக கணக்குப் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. நோர்வே பல்கலைக்கழகத்திடமிரந்து ரூபா 17,327,951 தொகை பெறப்பட்டிருந்த போதிலும் இதில் முன்னாள் பிரதி காசாளரின் கூற்றின் படி 2014 ஏப்ரல் 30 வரை ரூபா 8,614,737 தொகை செலவழிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 109 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஏப்ரல் 30 வரை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை | |
| (i) அத்தியாயம் X இன் பிரிவு 20.6 | 02 கல்விசார் உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் மாதாந்தம் படிவம் பொது 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப் |

| | |
|---|---|
| | பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் XXVII இன் பிரிவு 3:1 | பல்கலைக்கழகத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பன வருகைப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் உப வேந்தர் வழமையாக கல்விசார் உத்தியோகத்தர்கள் அவர்களுடைய வருகையை பதிவதில்லை என எனக்குத் தெரிவித்தார். |
| (இ) 2011 மே 6 ஆந் திகதிய பிஈ/எவ்எஸ்/ஏ/வாகனங்கள்/2011 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2013 யூலை மாதத்தில் பல்கலைக்கழகத்தின் வாகனங்கள் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 577,000 தொகை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவுகளிற்கான ரூபா 621,470,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுக்க முன்னர் உள்ள ரூபா 765,406,686 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 516,211,000 அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுக்க முன்னரான ரூபா 600,358,590 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம் ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 165,048,096 ஆல் மேலும் ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. ரூபா 9,133,842 ஆன ஏனைய வருமானத்திற்கு எதிராக ரூபா 168,614,358 ஆல் தொழிற்பாட்டுச் செலவினம் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல் பின்வருமாறு இருந்தன.

(அ) பரீட்சைகளின் பெறுபேறுகள்

2013 இல் நடைபெற்ற இறுதிப் பரீட்சைகள் மற்றும் சித்தியடைந்த பட்டதாரி மாணவர்களின் பின்வருமாறு உள்ளன.

| **விபரங்கள்** | **விவசாய பீடம்** | **கலை மற்றும் கலாச்சார பீடம்** | **வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடம்** | **விஞ்ஞான பீடம்** | **சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடம்** |
|---|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இறுதிப் பரீட்சைகளிற்காக தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | 24 | 311 | 103 | 41 | 42 |
| பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | 246 | 311 | 81 | 34 | 42 |
| பரீட்சைக்காக தோற்றிய மாணவர் எண்ணிக்கையின சதவீதமாக பட்டப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் எண்ணிக்கை | 100% | 100% | 78.64% | 82.92% | 100% |

**(ஆ) மாணவர் அனுமதி**

கடந்த 3 ஆண்டீகளின் போது ஒவ்வொரு பீடத்திற்கான அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளன.

| **பீடம்** | **அனுமதிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை** | | | **பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2010 | 2011 | 2012 |
| விவசாய பீடம் | 127 | 175 | 174 | 16 | 29 | - |
| கலை மற்றும் கலாச்சார பீடம் | 1,466 | 1,621 | 1,441 | 40 | 312 | 431 |
| வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடம் | 771 | 911 | 869 | 56 | 118 | 28 |
| விஞ்ஞான பீடம் | 214 | 367 | 368 | 12 | 31 | 17 |
| சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடம் | 215 | 238 | 238 | - | - | 27 |
| மொத்தம் | 2,793 | 3,312 | 3090 | 124 | 490 | 503 |

2012 ஆம் ஆண்டில் விவசாய பீடத்திலிருந்து எந்தவொரு மாணவரும் பட்டம் பெற்றிருக்காத அதேநேரம் கலை மற்றும் கலாசார பீடத்திலிருந்து 2010 இல் 40 மாணவர்கள் மாத்திரமே சித்தியடைந்திருந்தனர்.

**(இ) ஒரு மாணவருக்கான கிரயம்**

பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தின் மொத்தக் கிரயம் மற்றும் மீளாய்வாண்டிற்கான மாணவர் கிரயம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | விவசாய பீடம் | கலை மற்றும் கலாச்சார பீடம் | வர்த்தக மற்றும் முகாமைத்து வ பீடம் | விஞ்ஞான பீடம் | சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடம் |
|---|---|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா) | 124,721,710 | 128,483,284 | 124,959,683 | 124,372,918 | 125,258,078 |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 255 | 1290 | 775 | 579 | 359 |
| ஒரு மாணவருக்கான கிரயம் (ரூபா) | 489,105 | 99,599 | 161,238 | 214,806 | 348,908 |

விவசாய பீடத்தில் ரூபா 489,105 தொகையான ஒரு மாணவனுக்கான உயர்ந்த கிரயம் பதிவுசெய்திருந்த அதேநேரம் கலை மற்றும் கலாசார பீடத்தில் ரூபா 99,599 தொகையான ஒரு மாணவனுக்கான குறைவான கிரயத்தை பதிவுசெய்திருந்தது.

**(இ) மகாபொல மற்றும் உதவிப்பணம்**

மீளாய்வாண்டின் போது 925 மாணவர்களிற்கு மாஹாபொலவாக ரூபா 16,689,950 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 1,069 மாணவர்களிற்கு உதவிப் பணங்களாக ரூபா 18,796,100 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த மாணவர்கள் அவர்களுடைய பாடநெறிகளை இடைநிறுத்தியதாக 2014 மே 22 ஆன கணக்காய்வு திகதிவரை 610 மாணவர்களுக்கு மாஹாபொல சம்பந்தமாக ரூபா 1,826,900 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நூலக முகாமைத்துவம்**

நூலகத்திலிருந்து நூல்களை எடுத்திருந்த 52 விரிவுரையாளர்கள் குறித்த காலத்திற்கிடையில் 393 புத்தகங்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாகவிருந்த அந்தப் புத்தகங்களை திரும்பப் பெறுவதற்கோ அல்லது தாமதத்திற்கான தண்டப்பணத்தினை விதிப்பதற்கோ முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பல்கலைக்கழகமானது உபவேந்தர் பதவிக்காக பொருத்தமான நபர்களிடமிருந்து 2011 ஆகஸ்ட் 25 இல் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது. 2006 மே 01 இல் அவருடைய பதவியை வறிதாக்கிய முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளர் 2012 பெப்ரவரி 13 இலிருந்து உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உபவேந்தர் பதவிக்கான விண்ணப்பம் 2011 செப்தெம்பர் 30 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கனடா பிரஜாவுரிமையுடைய ஒருவர் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளர் என்போர் உபவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்தனர். அதேநேரம் அவர் 2011 செப்தெம்பர் 30 வரை பதவி வறிதாக்கப்பட்டிருந்தார்.

(ஆ) உபவேந்தர் பதவிக்கான விண்ணப்பம் 2011 செப்தெம்பர் 30 இல் முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளரால் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உப வேந்தர் பதவிக்காக விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர் 2011 ஒக்தோபர் 11 இலேயே அவருடைய பதவி மீளசேர்த்தலிற்காக பல்கலைக்கழகத்திற்கு கோரிக்கை செய்யப்பட்டிருந்தது.

(இ) சபையானது 2012 சனவரி 14 இல் அதன் 220 ஆவது கூட்டத்தில் கனடா பிரஜையை சிபார்சு செய்திருந்த அதேநேரம் இலஙகை அரசாங்க தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 8.2 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளை கருத்திற்கொள்ளமால் உபவேந்தர் பதவிக்காக தெரிவு செய்தவர் 2006 மே 01 முதல் 2011 நவம்பர் 30 வரை அவருடைய பதவி வறிதாக்கப்பட்வர் கனடாவில் வசிக்கின்றார்.

(ஈ) முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளர் 2012 பெப்ரவரி 13 இல் உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், உபவேந்தராக 2012 மார்ச் 05 இலேயே பல்கலைக்கழகத்தில் அவர் அவருடைய கடமைகளை பெறுப்பேற்றிருந்ததுடன் கனடாவில் இருந்து திரும்பிய பின்னர் எண்கணித திணைக்களத்தில் முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளராக அவர் கடமையிலிருந்து அதேதிகதியில் விலகியிருந்தார்.

(உ) உபவேந்தராக நியமிக்கும் நேரத்தில் அவர் கனடாவில் வசிக்கின்ற போதிலும் தபாலிடப்பட்ட நியமனக் கடிதத்தில் மட்டக்களப்பு முகவரி குறிப்பிடப்பட்டது.

(ஊ) 2011 ஒக்தோபர் 11 இல் அதற்காக அவர் வேண்டுகை செய்த பின்னர் 2011 திசெம்பர் 01 இல் பல்கலைக்கழகத்தால் முன்னர் சிரேஷ்ட விரிவுரையாளர் திரும்ப வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர் 2012 மார்ச் 05 இலேயே முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையை ஏற்றிருந்தார்.

## 4.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைப் பரிசில்கள் பெற்று வெளிநாடுகளிற்கு சென்ற பல்கலைக்கழகத்தின் ஐம்பதியொன்பது விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்களைப் பூர்த்தி செய்த பின்னர் கடமைக்கு திரும்பியிருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்தை விட்டு விலகிச் சென்றிருந்தனர். எவ்வாறாயினும், பல்கலைக்கழகம் உடன்படிக்கைகளை மீறியமைக்காக அந்த 59 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 150,994,569 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் உபவேந்தர் 74 பிணைமுறி மீறியோர்களில் 12 வழக்குகள் சட்டநடவடிக்கை எடுப்பதற்கும் மீறியோரிடமிருந்து அறவிடவேண்டியதை அறவிடுவதற்கும் சட்டமா அதிபர் நாயக திணைக்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தனெ எனக்கு தெரிவித்திருந்தார். அந்த வழக்குகள் இரண்டு அரச சபைகள் கையாளுகின்றன. மேலும், 2014 ஏப்ரல் 30 வரை பிணைமுறி மீறியோரிடமிருந்து ரூபா 9.7 மில்லியன் கூட்டுமொத்த தொகை அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 29(டி) மற்றும் 29(ஈ) பிரிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தால் பட்டபின் படிப்பு பாடநெறிக்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (யூஜீசி) அங்கீகாரம் 2013 திசெம்பர் 31 வரை கூட பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அத்தகைய

அங்கீகாரம் இல்லாமல் மூன்று பட்டபின்படிப்பு பாடநெறிகள் (கற்பிக்கப்பட்ட பாடநெறிகள்) நடாத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் உபவேந்தர் எம்பில், பிஎச்டி போன்ற அத்தகைய ஆராய்ச்சி அடிப்படை பாடநெறிகளிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் அவசியமற்றதென்று என்கு தெரிவித்திருந்தார்.

(இ) இலங்கை அரசாங்க தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 20 உத்தியோகபூர்வ விடுதிகளில் வசித்த 38 உத்தியோகத்தர்களிடமிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும், 2002 ஏப்ரல் 16 ஆந் திகதிய 147/2002 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க மதிப்பீட்டாளரிடமிருந்து அறிக்கை பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 150 முதல் ரூபா 600 வரையான வீச்சில் மாதாந்த வாடகையில் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிக்கின்றவர்களிடமிருந்து பொருளாதார வாடகை அறவிடப்பட்டிருந்தது.

## 4.3. மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு

சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் (எவ்எச்சிஎஸ்) பயன்பாட்டிற்காக இந்தியாவிலுள்ள ஒரு தனியார் கம்பனியிடமிருந்து முன்னைய ஆண்டின் போது ரூபா 13.36 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று (ரீஈசீ) மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. பதிலாக கொள்வனவுக் குழு (பிசீ) சிபார்சுசெய்யப்பட்டு மருத்துவ உபகரணங்கனை கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

(ஆ) சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடம் வேண்டப்பட்ட கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிற்கு ஈ மெயில் அனுப்புவதன் நேரடியாக கேள்விகளை வரவழைத்திருந்தது.

(இ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், எல்லா மூன்று கேள்விகளையும் ஒரே வழங்குநர் சமர்ப்பித்திருந்ததுடன் வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் முறைகேடுகள் இருந்தன. எவ்வாறாயினும் இது கொள்வனவுக் குழுவால் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ‘‘ரிசு செய்படுத்துதலின் எட்டு உதிரிப்பாகங்கள்’’ என்றழைக்கப்படும் மருத்துவ உபகரணங்கள் ரூபா 4.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ரூபா 2.9 மில்லியன் பெறுமதியான ரிசு செயற்படுத்துதல் பிரதான பாகம் கொள்வனவு செய்ய தவறியமை காரணமாக கொள்வனவு செய்த திகதியிலிருந்து பெட்டியில் பயனற்று இருந்தது.

(உ) கணக்காய்வு குழு பொய்யான கேள்விகள் சமர்ப்பித்தல், மிகவும் அதிகமான விலைகள், பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட விடயங்களில் தற்காலிக வியாபாரக்குறி மற்றும் அடையாளத்துடன் வழங்கல் மற்றும் வழங்கலிலுள்ள தாமதம் என்பன மூலம் பல்கலைக்கழகத்தை ஏமாற்றிய வழங்குநரிடமிருந்து இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தில் வழங்குநரை கறுப்புப் பட்டியலிற்கு 2014 சனவரி 27 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழகமானது 2014 யூன் 30 வரை கூட வழங்குநரை கறுப்பு பட்டியலிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட விசாரணைக் குழுவால் சிபார்சு செய்யப்பட்டவாறு வழங்குநருக்கு செய்யப்பட்ட ரூபா 850,546 மேலதிக கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணியின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| பதவியணி வகை | அங்கீகரித்த ஆளணி | உள்ளபடியான ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|
| கல்விசார் | 230 | 153 | 72 | - |
| கல்விசார் துணைநிலை | 14 | 09 | 05 | - |
| நிர்வாகம் | 29 | 19 | 10 | |
| தற்காலிக (கல்விசார்) | 59 | 58 | 01 | - |
| வருகையாளர் | - | - | - | 70 |
| மொத்தம் | 332 | 239 | 388 | 70 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகமானது 88 வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீளாய்வாண்டு இறுதிவரைகூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஐந்து பீடங்களில் பேராசிரியர் மற்றும் இணைந்த பேராசிரியர் போன்ற அத்தகைய பிரதன கல்விசார் பதவியில் 20 வெற்றிடங்கள் உள்ளன. எவ்வாறாயினும், பல்கலைக்கழகமானது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில், உபவேந்தர் வெற்றிடப்பதவிகள் பல சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது, ஆனால் எந்தவொரு விளைவுகளும் இல்லை என எனக்கு தெரிவித்திருந்தார்.

## 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

2007 ஆம் ஆண்டில் ரூபா 2,018,963 கிரயத்தில்இழுவை வண்டி கொள்வனவு செய்யப்பட்டு செனற் கட்டிடத்தில் பொருத்தப்பட்டவை உதிரிப்பாங்கள் இன்மை காரணமாக ஆறு ஆண்டுகளிற்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

## 5.1 ஆண்டறிக்கை முன்வைத்தல்

2011 ஆம் அண்டிற்கான ஆண்டறிக்கை 2014 சனவரி 20 இலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் அண்டிற்கான ஆண்டறிக்கை 2014 ஏப்ரல் 30 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 செயற்பாட்டுத் திட்டம்

அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5/(4) ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் பல்கலைக்கழகமானது மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிரந்தர மற்றும் அனுபவமுள்ள பதவியணியினர் வினைத்திறனான மற்றும் ஆக்கபூர்வமான வழியில் உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கொள்வனவுத் திட்டம்

2006 கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உண்மையான செலவினத்திற்கு இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) முற்பணங்களின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

(ஈ) கொள்வனவு நடைமுறைகள்

(உ) ஓய்வுபெறல் நடைமுறைகள்